1992 மார்ச் 23]

இருக்கிறது. ஆகவேதான் பன்றிமலையை பயனுள்ள பாதையாக மாற்றியதற்குப் பிறகு பேருந்து இயக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 9.55

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண். 306 திரு கே. முனிவெங்கடப்பன். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

306—

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகக் கிளை அலுவலகத்தை மாற்றல்.

*4230 திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்— கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கிருட்டிணகிரி நகரில் இயங்கி வருகின்ற திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகக் கிளை அலுவலகம் இடவசதியின்மையால் புது இடத்தில் மாற்றி அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது, எவ்வளவு மதிப்பீட்டில் துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கிருட்டிணகிரியில் சிறு தொழில் மேம்பாட்டுக் கழகத்திற்கு சொந்தமான கிருட்டிணகிரி புறவழிச் சாலையில் 1.69 ஏக்கர் பரப்பளவு உள்ள இடம் ஒதுக்கப்பட்டு அதற்கான பணமும் செலுத்தப்பட்டுள்ளது. பணிமனை கட்டிடங்கள் அமைக்க சுமார் ரூ. 24.00 இலட்சம் மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. திட்டத்திற்கான ஒப்புதல் பெறப்பட்டதும் கட்டிடப்பணி துவங்க தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உண்டு என்று சொன்னதற்காக எனது தொகுதிவாழ் மக்கள் சார்பாகவும், மாவட்ட மக்கள் சார்பாகவும் நன்றி தெரிவித்துக்கொண்டு மாவட்டத்தின் பெரிய நகரமான கிருஷ்ணகிரியில் தினந்தோறும் இலட்சக்கணக்கான மக்கள் பயணம் செய்கிறார்கள், எனவே

அவர்களுடைய வசதிக்காக இந்தக் கிளையை எவ்வளவு வேகமாக அமைத்துக் கொடுக்க முடியும் என்பதை மாண்புமிகு அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் கேட்காமல் கொடுக்கக்கூடிய வல்லமை படைத்தவர்கள். ஆகவேதான் நமது உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டவுடனே இந்த இடத்தை நாங்கள் தேர்வுசெய்திருக்கிறோம் என்று சொன்னோம். ஓரிரு மாத காலத்தில் அந்தப் பணிகள் துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விரைவாக முடித்துக் கொடுப்போம் என்று சொன்னதற்காக மாண்புமிகு நமது போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும், இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. தா. வேடியப்பன். இது தொடர்பான கேள்வி கேட்கவேண்டும்.

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் கேட்காமல் கொடுப்பார்கள் என்று நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். எங்களுடைய திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் ஏற்படுத்த........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தொடர்பில்லாத துணைக் கேள்வி இது. இந்த மாதிரிக் கேட்டு அவையின் நேரத்தைத் தயவுசெய்து வீணாக்காதீர்கள்.

வினா எண் 307. டாக்டர் வெ. புருஷோத்தமன். மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர்.

307—

பெண்ணாகரம் தொகுதியில் விசைத்தறி தொழிற்சாலை.

*1052 டாக்டர் வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெண்ணாகரம் தொகுதியில் விசைத்தறிகள் தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?